பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
11 06 2024 7 15
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய அமைச்சர்களுக்கான இலாக்காக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

2. திரு. ஜே.பி. நட்டாவுக்கு சுகாதாரத் துறையும், திரு. தர்மேந்திர பிரதானுக்கு கல்வித் துறையும், திரு. ஹர்தீப் சிங் பூரிக்கு பெட்ரோலியத் துறையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

3. மாநிலங்களுக்கான வரிப் பகிர்வை மத்திய அரசு விடுவித்துள்ளது.

4. நாடாளுமன்ற இரு அவைகளுக்கும் திமுக உறுப்பினர்கள் குழு தலைவராக திருமதி கனிமொழி நியமிக்கப்பட்டுள்ளார்.

5. உலகக்கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியா இன்று கத்தாரை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள் --*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவையில் பொறுப்பேற்றுக்கொண்டவர்களுக்கு இலாகா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி திரு. ராஜ்நாத் சிங்கிற்கு பாதுகாப்புத்துறையும், திரு. அமித் ஷாவுக்கு உள்துறையும், திருமதி நிர்மலா சீதாராமனுக்கு நிதித்துறையும், திரு. ஜெய்சங்கருக்கு வெளியுறவுத் துறையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. நிதின் கட்கரி - சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை திரு. பியூஷ் கோயல் - வர்த்தகம் மற்றும் தொழில்

திரு. தர்மேந்திர பிரதான் - கல்வி

திரு. ஜே.பி. நட்டா — சுகாதாரத்துறை மற்றும் ரசாயனம்

திரு. ஷிவ்ராஜ்சிங் சௌஹான் - வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி திரு. அஸ்வினி வைஷ்ணவ் - ரயில்வே மற்றும் தகவல் ஒலிபரப்பு

திரு. ஹர்தீப் சிங் பூரி - பெட்ரோலியம்,

திரு. சி.ஆர். பாட்டீல் - நீர்வளம்

திரு. மன்சுக் மாண்டவியா — தொழிலாளர் நலன் மற்றும் விளையாட்டு

திரு. ஆர்.எம். மோகன் நாயுடு — விமானப் போக்குவரத்து

திரு. ஹெச்.டி. குமாரசாமி — கனரக தொழில்

திரு. சர்பானந்த சோனோவால் - கப்பல் போக்குவரத்து

திருமதி அன்னபூர்ண தேவி — மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

திரு. சிராக் பஸ்வான் - உணவு பதப்படுத்துதல்

திரு. மனோகர் லால் - மின்சாரம் மற்றும் வீட்டுவசதி

திரு. பிரல்ஹாத் ஜோஷி — உணவு மற்றும் நுகர்வோர் விவகாரம்

திரு. கிரிராஜ் சிங் - ஜவுளி

திரு. அர்ஜுன் ராம் மேக்வால் - சட்டம்

திரு. கிரண் ரிஜிஜு - நாடாளுமன்ற விவகாரம் மற்றும் சிறுபான்மையினர் நலன் ஆகிய துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

திரு. எல். முருகன் தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை இணையமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<>>>>

பிரதமராக தாம் 3வது முறையாக பொறுப்பேற்றுக்கொண்டதை அடுத்து முன்னாள் குடியரசுத்தலைவர் திருமதி பிரதீபா பாட்டீல், முன்னாள் பிரதமர்கள் திரு. மன்மோகன் சிங், திரு. தேவேகவுடா ஆகியோரை சந்தித்து திரு. நரேந்திர மோடி வாழ்த்து பெற்றார்.

<<<<>>>>

ஒடிசாவில் பிஜேபி சட்டப்பேரவைக் கட்சித் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் இன்று புவனேஸ்வரில் நடைபெறுகிறது.

இதற்காக மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், திரு. பூபேந்தர் யாதவ் ஆகியோர் பிஜேபி மேலிடப் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒடிசாவில் பிஜேபி தலைமையிலான அரசு நாளை பதவியேற்கும் நிலையில் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது.

<<<<>>>>

மாலத்தீவு அதிபர் டாக்டர் முகமது மொய்சு, மொரீஷியஸ் பிரதமர் திரு. பிரவீன் குமார் ஜுக்நாத், நேபாள பிரதமர் திரு. புஷ்ப கமல் தஹல், செஷல்ஸ் துணை அதிபர் திரு. அகமது அஃபிப் ஆகியோர் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை நேற்று சந்தித்தனர்.

அப்போது மாலத்தீவின் புதிய அரசுக்கும், அந்நாட்டு மக்களுக்கும் குடியரசுத்தலைவர் வாழ்த்து தெரிவித்தார்.

மொரீஷியஸ் பிரதமரை சந்தித்த அவர், பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட்டு வளர்ச்சி கண்டதாக திருப்தி தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து நேபாள பிரதமரை திருமதி திரௌபதி முர்மு சந்தித்துப் பேசினார்.

இருநாட்டு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு துறைகளில் வளர்ச்சிப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான வழிவகைகள் குறித்து குடியரசுத்தலைவரும், நேபாள பிரதமரும் விவாதித்தனர்.

பின்னர் செஷல்ஸ் துணை அதிபர் திரு. அகமது அஃபிப்-யிடம் பேசிய குடியரசுத்தலைவர், செஷல்ஸ் தீவின் வளர்ச்சிப் பணிகளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று உறுதியளித்தார்.

<<<<>>>>

நடப்புக் கல்வியாண்டுக்கான பாடத்திட்டம், பாடப்புத்தகங்கள், மாதிரி வினாத்தாள்கள் குறித்து பரப்பப்படும் தவறான தகவல் தொடர்பாக எச்சரிக்கையுடன் இருக்குமாறு மாணவர்களையும், பெற்றோர்களையும் சி.பி.எஸ்.இ. அறிவுறுத்தியுள்ளது.

சில ஆன்லைன் தளங்களில் கல்வி தொடர்பான காலாவதியான இணைப்புகள், தவறான செய்திகள் இடம்பெற்றுள்ளதால் அதனைத் தவிர்க்குமாறு மாணவர்களை கேட்டுக்கொண்டுள்ளது.

அங்கீகரிக்கப்படாத தகவல்கள், பள்ளிகள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்டோரை தவறாக வழிநடத்த வாய்ப்புள்ளதாக அது கூறியுள்ளது.

எனவே அதிகாரபூர்வ மற்றும் புதிய தகவல்களுக்கு சி.பி.எஸ்.இ.-ன் இணையதளத்தை மட்டும் அணுகுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

மணிப்பூரில் தமது பாதுகாப்பு குழுவினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அம்முதலமைச்சர் திரு. பிரேன் சிங் கண்டனம் தெரிவித்துள்ளார்.

குற்றவாளிகள் கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

தாக்குதலில் காயமடைந்து இம்பாலில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள ஓட்டுநரை அவர் சந்தித்து நலம் விசாரித்ததாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் நடப்பு கல்வியாண்டில் பொறியியல் மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க இன்று கடைசி நாளாகும்.

இதுதொடர்பாக, மாநில தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், முன்னதாக நேற்று முன்தினம் விண்ணப்பிக்க கடைசி நாளாக இருந்த நிலையில் மாணவர்களின் கோரிக்கையை ஏற்று இன்று வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

மாணவர்கள் **tneaonline.org** என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மாநிலங்களுக்கான வரிப் பகிர்வை மத்திய அரசு விடுவித்துள்ளது.

மொத்தம் ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்திற்கு 5 ஆயிரத்து 700 கோடி ரூபாயும், ஆந்திரப்பிரதேசத்திற்கு 5 ஆயிரத்து 655 கோடி ரூபாயும், கர்நாடகாவிற்கு 5 ஆயிரத்து 96 கோடி ரூபாயும், கேரளாவுக்கு 2 ஆயிரத்து 690 கோடி ரூபாயும் விடுவிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக உத்தரப்பிரதேசத்திற்கு 25 ஆயிரத்து 69 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பீகாருக்கு 14 ஆயிரத்து 56 கோடி ரூபாயும், மத்தியப்பிரதேசத்திற்கு 10 ஆயிரத்து 970 கோடி ரூபாயும், மேற்குவங்கத்திற்கு 10 ஆயிரத்து 510 கோடி ரூபாயும் வரிப் பகிர்வாக விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

திமுக நாடாளுமன்றக் குழு நிர்வாகிகளை அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

மக்களவை, மாநிலங்களவை இரண்டு அவைகளுக்கும் சேர்த்து நாடாளுமன்ற குழு தலைவராக திருமதி கனிமொழி நியமிக்கப்பட்டுள்ளார்.

மக்களவை குழு தலைவராக திரு. டி.ஆர். பாலுவும், கொறடாவாக திரு. ஆ. ராசாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாநிலங்களவை குழு தலைவராக திரு. திருச்சி சிவாவும், கொறடாவாக வழக்கறிஞர் திரு. வில்சனும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இரு அவைகளின் பொருளாளராக திரு. ஜெகத்ரட்சகன் நியமிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

பீகார் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கடும் வெப்பம் நிலவி வருகிறது.

இதன் காரணமாக மாநிலத்தின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

போஜ்புர், அர்வால், ரோட்டஸ் பக்சார், ஷேக்புரா, பெகுசராய் உள்ளிட்ட மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை 45 டிகிரி செல்சியசுக்கும் அதிகமாக பதிவானது.

இதன்மூலம் பள்ளி மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சில மாணவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடும் வெப்பம் நிலவுவதை அடுத்து பீகார் மாநிலம் முழுவதும் இன்று முதல் 5 நாட்களுக்கு அனைத்துப் பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே அடுத்த 24 மணி நேரத்தில் வெப்பநிலை தொடர்பான சிவப்பு எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

<<<<>>>>

பொருளாதார நெருக்கடி காலத்தில் தங்கள் நாட்டுக்கு இந்தியா பெருமளவில் உதவி செய்ததாக இலங்கை மின்துறை அமைச்சர் திரு. **D.V. Chanaka** தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கொழும்புவில் எமது செய்தியாளரிடம் பேசிய அவர், நெருக்கடியான நிலையில் இருந்து தமது நாட்டை மீட்பதற்கு இந்தியா ஆதரவளித்ததாக கூறினார்.

இலங்கையில் எரிபொருள் வினியோகம் மீண்டும் தொடங்குவதற்கு இந்திய எண்ணெய் கழகம் உதவியதாக அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் எரிசக்தி கேந்திரமாக திரிகோணமலை திகழும் என்று கண்டறியப்பட்டுள்ளதாகவும், அங்கு இந்தியாவுடன் இணைந்து சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட தமது நாட்டு அரசு விரும்புவதாகவும் இலங்கை அமைச்சர் திரு. **D.V. Chanaka** கூறினார்.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநிலம் **Ghatkopar**-ல் விளம்பரப் பலகைகள் சரிந்து விழுந்த விபத்து குறித்து, நீதிமன்ற விசாரணைக்கு அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

அலகாபாத் உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திலீப் போஸ்லே தலைமையில் விசாரணைக் குழு ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

முன்னதாக நடைபெற்ற முதற்கட்ட விசாரணையின்போது விளம்பரப் பலகைகள் அமைப்பதற்கான அடித்தளம் மிகவும் பலவீனமாக இருந்ததாக தெரியவந்தது.

கடந்த மாதம் 13ஆம் தேதி அன்று **Ghatkopar** பகுதியில் வீசிய சூறாவளிக் காற்று காரணமாக விளம்பரப் பலகைகள் சரிந்து விழுந்த விபத்தில் 16 பேர் உயிரிழந்தனர். 70 பேர் காயமடைந்தனர்.

<<<<>>>>

மலாவி நாட்டு துணை அதிபர் திரு. **Saulos Chilima** மற்றும் 9 பேர் சென்ற விமானம், காணாமல் போய்விட்டதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

தலைநகர் **Lilongee** யில் இருந்து புறப்படட்ட மலாவி பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான விமானம், ரேடாரில் இருந்து மறைந்ததாக மலாவி அதிபர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த விமானத்தில் மலாவி துணை அதிபர், அவரது மனைவி மற்றும் 8 பேர் பயணித்தாக கூறப்பட்டுள்ளது.

விமானத்தை தேடும் பணியும், மீட்புப் பணியும் நடைபெற்று வருவதாக மலாவி அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலகக்கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியா இன்று கத்தாரை எதிர்கொள்கிறது.

தோஹாவில் நடைபெற உள்ள இப்போட்டி, இரவு மணி 9.15க்கு தொடங்குகிறது.

\-------------

உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா 4 ரன் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது.

நியூயார்க்கில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்க அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 113 ரன் எடுத்தது.

114 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 109 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பாகிஸ்தான் - கனடாவை எதிர்கொள்கிறது.

----------------

**Stuttgart** ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில், இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்சின் **Albeno Olivetti** இணை, இன்று நியூசிலாந்தின் **Michael Veenus -** இங்கிலாந்தின் **Neal Skupski** இணையை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**